# பா.ஜ.க.வை வீழ்த்துவதே அனைத்து தலைவர்களின் ஒற்றை இலக்கு!

## முதல்வர் பேட்டி - முதல் பக்கத் தொடர்ச்சி

பங்கீடுகளை மட்டுமே செய்து கொள்ளலாம். அதுவும் முடியவில்லை என்றால் பொதுவேட்பாளர் அறிவித்துக் கொள்ளலாம். தேர்தலுக்கு பிறகு கூட்டணி அமைத்துக் கொள்ளலாம் என்பது சரியான நிலைப்பாடாக இருக்க முடியாது. அரசியல் கட்சிகளுக்கு இடையே குறைந்தபட்ச செயல்திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

**ஒருங்கிணைந்த நடவடிக்கைக்குழு அமைத்திட வலியுறுத்தினேன்!**

இதுபோன்று எழும் பிரச்னைகளைச் சரிசெய்ய ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழு அமைக்கப்பட வேண்டும். என்று வரிசையாகச் நான் அந்தக் கூட்டத்திலே பேசுகின்ற போது வலியுறுத்தி சொல்லி இருக்கிறேன்.

பாஜகவை வீழ்த்துவதை அனைத்துத் தலைவர்களும் ஒற்றை இலக்காகக் கொண்டு இருக்கிறார்கள்.

பாஜகவை வீழ்த்த அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்று நினைத்தோம். அந்த ஒற்றுமை பாட்னாவில் ஏற்பட்டு இருக்கிறது.

ஒற்றுமையே வெற்றிக்கு அடிப்படை. நிச்சயமாக அகில இந்திய அளவில் பாஜக தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இப்போதுதான் கருவாகி இருக்கிறது. அது உருவாக இன்னும் சில மாதங்கள் ஆகலாம். அடுத்தடுத்த நடவடிக்கைகளை பின்னர் உங்களுக்குத் தெரிவிக்கிறோம்.

பாட்னாவில் கூடினோம்.

மகிழ்ச்சியாகத் திரும்பினோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்வியும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலும் வருமாறு:

**செய்தியாளர்கள் கேள்விக்கு பதில்**

**செய்தியாளர் :** இந்த கூட்டம் நடந்து முடிந்தபின்னர் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. நீங்களும், ஆம் ஆத்மி கட்சியும் கலந்து கொள்ளவில்லை. அதில் ஏதாவது காரணம் இருக்கிறதா ?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** நன்றி சொல்லி முடிக்கும் வரை நான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அதற்குப்பிறகு எனக்கு விமான நிலையம் செல்ல நேரமாகிவிட்டது. மதிய உணவுக்கு பிறகுதான் செய்தியாளர் சந்திப்பு வைத்திருந்தார்கள். அதனால் மதிய உணவு கூட சாப்பிட முடியாமல், விமானத்தில் தான் சாப்பிட்டேன். அவர்களிடம் சொல்லி விட்டு தான் வந்தேன். வேறு எந்த காரணமும் இல்லை. அதுதான் உண்மை.

### குறைந்த பட்ச செயல் திட்டம் வகுக்கப்பட வலியுறுத்தினேன்!

**செய்தியாளர் :** ஆத் ஆத்மி கட்சி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். டெல்லி Ordinance தொடர்பாக காங்கிரஸ் கட்சி அவர்களது நிலைப்பாடு குறித்து இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. அதுகுறித்து…

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** நீங்கள் அது குறித்து அவரிடம் தான் கேட்க வேண்டும்.


**செய்தியாளர் :** இரண்டாம் கட்ட கூட்டம் சிம்லாவில் நடைபெறும் என்று கூறியிருக்கிறார்கள். முதற்கட்ட கூட்டத்தில் முழுமையாக எதுவும் எட்டப்படவில்லையா? எதற்காக இரண்டாவது கூட்டம் ?

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்:** முதல் கூட்டத்தில் கூடினோம். என்ன செய்வது என்பது பற்றி முடிவு செய்திருக்கிறோம். போகப்போக அடுத்தக் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்போகிறோம் என்பதை தெரிவிக்கிறோம்.

**செய்தியாளர் :** பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்து….

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் :** அது இன்னும் முடிவு செய்யவில்லை. நீங்கள் எல்லோரும் ஆர்வமாக இருப்பதைப் பார்த்தால். பிரதமர் வேட்பாளர் யார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்தார்.



**உ**ண்மை தூங்கிக்கொண்டே
இருக்கப் போவதுமில்லை !
பொய் பல்லக்கில்
பவனி வந்துகொண்டே
வாழ்ந்துவிடப் போவதுமில்லை !
காலம் வரும்போது
கண் எதிரே எவரும்
அடையாளம் காண
நேரிடும்.

**.....கலைஞர்....**

### மதுரை மாவட்டத்தில் ரூ.20 கோடியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையம்!

# மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ரூ.6.34 கோடியில் 15 புதிய சுகாதார மைய கட்டடம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன்-பி.மூர்த்தி தொடங்கிவைத்தனர்!



மதுரை மாவட்டம் ஆனையூரில் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள 15 புதிய சுகாதார மைய கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேற்று (23.6.2023) திறந்து வைத்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் மாநராட்சி ஆணையாளர் பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்). மாநராட்சி துணை மேயர் நாகராஜன் , மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.சூரியகலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

*மதுரை, ஜூன் 24-*

மதுரை அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக நேற்று (23.06.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஒப்புயர்வு மையத்திற்கான கட்டுமான பணிகளையும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ரூ.6.34 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 15 புதிய சுகாதார மைய கட்டடங்களையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது:

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடைபெற்ற மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் 2022-2023 மானிய கோரிக்கை எண்.19-ன் அறிவிப்பு 67-ன் படி, மதுரை அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஒப்புயர்வு மையத்திற்கான கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது 56,685 சதுர அடி பரப்பளவில் தரைதளத்துடன் 2 மாடிகள் என 100 படுக்கை வசதிகளுடன் கூடிய கட்டடமாக அமைய உள்ளது. இக்கட்டுமானப் பணிகளை 1 வருட காலத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மதுரை அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி பங்களிப்புடன் ரூ.155.65 கோடி மதிப்பீட்டில் டவர் பிளாக் கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இன்னும் 2 மாத காலத்திற்குள் முழுமையாக நிறைவேற்றப்படும்.

**நிதி ஆதாரம் பெறப்பட்டு கட்டுமானப் பணி!**

மேலும், மதுரை மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.6.34 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 15 புதிய சுகாதார மைய கட்டடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அந்தந்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் இருக்கும் இடத்திலேயே எளிதில் தரமான மருத்துவ வசதி பெற வாய்ப்பாக அமையும். திருமங்கலம் பகுதியில் செயல்பட்டு வந்த மதுரை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தற்போது உள்ள இடம் மழைக்காலங்களில் தண்ணீர் சூழ்ந்து கட்டடங்கள் இயங்க முடியாத காரணத்தால் தோப்பூர் பகுதியில் மாற்று இடம் தேர்வு செய்வதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் 5 ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு நிதி ஆதாரம் பெறப்பட்டு விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும்.

பொதுமக்களிடையே நடைப்பயிற்சி பழக்கத்தை ஊக்குவித்திடும் நோக்கில் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் ”நடப்போம் நலம் பெறுவோம் HEALTH WALK“ என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுக்கும் விதமாக மதுரை ரேஸ் கோர்ஸ் பகுதியிலிருந்து பொதுமக்கள் 8 கி.மீ. நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கு முன்னோடியாக முதலில் மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கான நிதி ஆதாரம் தொடர்பாக ஒன்றிய அரசின் பிரதிநிதிகளுடன் ஜப்பான் நாட்டிற்கு நேரடியாக சென்று ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை தலைமை அலுவலகத்தில் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. டிசம்பர் 2023-க்குள் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான டிசைன் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது எனவும், டிசம்பர் 2024-க்குள் கட்டுமானப் பணிகளை தொடங்கி 2028-ஆம் ஆண்டிற்குள் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படும் என தெரிவித்துள்ளார்கள். விரைவில் அதற்கான பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

முன்னதாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் ஆகியோர் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள ”நடப்போம் நலம் பெறுவோம் HEALTH WALK“ திட்டத்தின் கீழ் மதுரை ரேஸ்கோர்ஸ் பகுதியில் பொதுமக்கள் 8 கி.மீ நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதிபடுத்துவதற்காக ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், மதுரை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தற்போது உள்ள இடம் மழைக்காலங்களில் தண்ணீர் சூழ்ந்து கட்டிடங்கள் இயங்க முடியாத காரணத்தால் தோப்பூர் பகுதியில் மாற்று இடம் தேர்வு செய்வதற்காக நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த நிகழ்வுகளின் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன்வசந்த், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே.பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), இராசாசி மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் இரத்தினவேல், தலைமைப் பொறியாளர் மதுரை மண்டலம் எஸ்.ரகுநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. சூரிய கலா கலாநிதி, துணை மேயர் தி.நாகராஜன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# பீகாரில் ஒருங்கிணைப்புக் கூட்டம்!

**முதல் பக்கத் தொடர்ச்சி**

நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பாட்னா விமான நிலையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பீகார் துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ் வரவேற்றார். இதைத்தொடர்ந்து பீகார் முதலமைச்சர் நிதிஷ்குமார் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை சந்தித்து பேசினார்.

நாடாளுமன்றத் தேர்தல் வருகிற 2024ஆம் ஆண்டு நடப்பதையொட்டி எதிர்க்கட்சிகளை ஓரணியில் திரட்டும் முயற்சியில், பீகார் முதல்வர் நிதிஷ்குமார் ஈடுபட்டுவருகிறார். இதற்காக பாட்னாவில் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தை கடந்த 12ஆம் தேதி நிதிஷ்குமார் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார். ஆனால், அன்றைய தினத்தில் காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி அமெரிக்காவில் இருந்ததால் வர முடியவில்லை என்று கூறப்பட்டது. இதேபோல் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் மேட்டூர் அணையைத் திறக்க இருந்ததால் அவராலும் எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாது என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் எதிர்க்கட்சிகள் கூட்டம் 23ஆம் தேதிக்கு தள்ளி வைக்கப்பட்டது.

அதன்படி நேற்று (23ஆம்தேதி) பாட்னாவில் எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டுமானால் குறைந்தபட்சம் 400 முதல் 450 தொகுதிகளிலாவது பொது வேட்பாளர்களை நிறுத்துவது; குறைந்தபட்ச செயல் திட்டம் வகுப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து இந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

# அஞ்சா நெஞ்சன் பட்டுக்கோட்டை அழகிரியின் பிறந்தநாள்!

**தி**ராவிட இயக்கத் தலைவர்களில், அஞ்சா நெஞ்சன், தளபதி என்ற இரு அடைமொழிகளாலும் அறியப்பட்டவர் பட்டுக்கோட்டை அழகிரிசாமி. தீவிரமாகப் பெரியாரைப் பின்பற்றியவர்; தன் வாழ்நாள் முழுதும் ஒரே தலைவன் ஒரே கட்சி என்று வாழ்ந்தவர். மலை குலைந்தாலும் மனம் குலையாத கொள்கை மறவன். சுயமரியாதை இயக்கத்தின் சுடர் விளக்கு! சாதி, மத, மூட நம்பிக்கைகளை எதிர்த்து தினம் மேடையமைத்துப் பரப்புரை செய்து வந்தவர்.



அஞ்சா நெஞ்சன்
பட்டுக்கோட்டை அழகிரியின்
பிறந்தநாள் இன்று.
(23.06.1900)

கலைஞர் 100 1924 - 2023



“நான் நிரந்தரமானவன்
அழிவதில்லை
எந்த நிலையிலும்
எனக்கு மரணமில்லை”
– கவியரசு கண்ணதாசன்




கவியரசு
**கண்ணதாசன்**
அவர்களின்
**97ஆவது பிறந்த நாள்**

தமிழ்நாடு அரசின் சார்பில்

கவியரசு **கண்ணதாசன்**
அவர்களின் திருவுருவச் சிலைக்கு

**மாண்புமிகு
அமைச்சர் பெருமக்கள்,
மாண்புமிகு மேயர்,
நாடாளுமன்ற,
சட்டமன்ற உறுப்பினர்கள்,
துணை மேயர்,
உள்ளாட்சி அமைப்புகளின்
பிரதிநிதிகள்,
சீர்மிகு பெருமக்கள்**
மலர் தூவி மரியாதை செலுத்துவார்கள்

நாள் : 24.6.2023, சனிக்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
இடம் : கோபதி நாராயணா சாலை, தியாகராய நகர், சென்னை

இயக்குநர்,
செய்தி – மக்கள் தொடர்புத் துறை,
சென்னை–600 009

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

செ.ம.தொ.இ./702/வரைகலை/2023